4th January 1970]

விடுப்பு விதிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விடுப்பு குறித்த விதிகள் இல்லாத காரணத்தால் மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பல ஆசியர்களுக்கு 1964-ம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 1968-ம் வருடம் எப்ரல் 1-ஆம் தேதி வரை சம்பளமில்லாத விடுப்புக் கொடுக்கப்பட்டுள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) கல்வித் துறையின் 1968-ம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் நாளிட்ட 451-ஆம் எண் கொண்ட அரசு ஆணையை 1964-ஆம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் (முற்காலத்துக்கும் பொருந்தும் வகையில்) செயல்படுத்துவதற்கான செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 1966-ம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து இந்த ஆசிரியர்களுக்கு அரசாங்கம் சம்பளம் கொடுத்து வருகிறது. 1968-ம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதிக்குப் பிறகுதான் அவர்களுடைய விடுப்பு சம்பந்தமான உத்தரவை அரசு பிறப்பித்திருக்கிறது. 4 ஆண்டு காலத்தில் காஷுவல் லீவ் தவிர, அவர்கள் எடுத்த அவசர விடுப்பை சம்பளத்தில் கழிக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, 1966-ம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து லீவ் ரூல்கள்—விடுப்பு முறை பற்றிய உத்தரவை அரசு அமுலாக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : 1968-ம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் லீவ் ரூல்கள் ஒழுங்கு படுத்தப்பட்டு மற்ற பள்ளிகளைப் போன்று உதவி பெறும் பள்ளிகளில் இருக்கிறவர்களுக்கும் பெறுவதற்கு வாய்ப்பளித்திருக்கிறது. அதற்கு முன்னால் லீவினால் நஷ்டம் ஏற்பட்டதாக முறையீடு எதுவும் வரவில்லை என்ற குறிப்பு வந்திருக்கிறது. 1964-ஆம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து 1968-ம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதி வகையில் கொடுப்பதற்கில்லை. 1968லிருந்து தான் கொடுக்கப்படுகிறது.

திரு. எம். ராஜா அய்யர் : 1968-ம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதியில் 30, 35 ஆண்டுகள் அனுபவம் பெற்ற ஆசிரியர்களாக இருந்தாலும், ஆண்டுக்கு 3 நாட்கள் வீதம் தான் லீவ் எலிஜிபிலிடி வருகிறது. இந்தக் கோரிக்கை நியாயமாகத் தோன்றுகிறது. அவர்களுடைய முழு சர்வீசையும் எடுத்துக் கொண்டு, லீவ் நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்பது தான் நியாயம். 1964-ம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து தான் நிர்ணயிக்கப்படும் என்பதை அரசாங்கம் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அதுபற்றிய முழு விவரத்தை அது சம்பந்தப்பட்டவர்கள் விண்ணப்பித்தால் ஆலோசிக்கலாம்.

Secondary Grade Teachers working in Elementary schools

*51 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether any orders have been issued upgrading secondary grade teachers working in Higher Grade posts in Elementary schools in the State as Secondary Grade posts in 1969–70 ; and

(*b*) if so, the number of posts so upgraded ?

தொடக்கப்பள்ளிகளில் பணிபுரியும் இடை நிலைத்தர ஆசிரியர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலத்திலுள்ள தொடக்கப் பள்ளிகளில் உயர்நிலைத் தர ஆசிரியர் பதவிகளில் பணிபுரியும் இடைநிலைத் தர ஆசிரியர் பதவிகளை (Secondry Grade) இடைநிலைத் தர ஆசிரியர் பதவிகளாக உயர்த்தும் ஆணைகள் ஏதேனும் 1969–70இல் பிறப்பிக்கப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், அவ்வாறு உயர்த்தப்பட்ட ஆசிரியர் பதவிகளின் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 3,000.

திரு. ஜி. சுவாமிநாதன் : உயர்த்திக் கொடுத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மொத்தம் 14 ஆயிரம் ஆசிரியர்கள் 1967-ல் இருந்தார்கள். அதில் 11 ஆயிரம் ஆசிரியர்கள் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள். அவர்களுக்கு செகண்டரி கிரேடு அளவுக்கு ஊதியம் உயர்த்தித்தர வேண்டுமென்று உத்தரவாகியிருக்கிறது. மீதமுள்ள 3 ஆயிரம் ஆசிரியர்களும் இந்த ஆண்டு 1970–71ல் மீண்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டு செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கான ஊதியம் அளிக்கப்படுகிறது.

திரு. எம். ராஜா அய்யர் : 1970–71-க்குப் பின்னால் ஹையர் கிரேடு போஸ்டுகளில் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் செகண்டரி கிரேடு சம்பளம் பெறாமல் பணியாற்ற அனுமதித்துள்ளதால், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் எல்லோருக்கும் ஹையர் கிரேடு போஸ்டில் அவர்கள் இருந்தாலும் உயர்தரத் தகுதிகளை வைத்துக்கொண்டு ஹையர் கிரேடு போஸ்டில் இருப்பதால், அதற்காகக் குறைந்த சம்பளம் வாங்கும் நிலைமை இல்லாமல், மாநிலம் முழுவதும் உயர்த்திக்கொடுக்கும் அளவுக்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : செகண்டரி கிரேடுபெற்ற ஆசிரியர்கள் அத்தனை பேருக்கும் செகண்டரி கிரேடு சம்பளம் தர வேண்டுமென்றுதான் படிப்படியாகத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. 11 ஆயிரம் ஆசிரியர்கள் கொடுக்கப்படுகிறார்கள். 3 ஆயிரம் ஆசிரியர்களுக்குக் கொடுக்க இருக்கிறார்கள். மறுபடியும் அவற்றைக் கணக்குப் பார்க்கும் போது அவர்களும் கவனிக்கப்படுவார்கள்.

National Foundation for Teachers' Welfare.

*52 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) the total amount to the credit of the National Foundation for Teachers' Welfare, Tamil Nadu Branch ; and

(*b*) the amount disbursed during the financial year 1968–69 ?

ஆசிரியர் நலம் குறித்த தேசிய நிறுவனம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர் நலம் குறித்த தேசிய நிறுவனத்தின் தமிழ்நாடு கிளைக்கு வரவாக வைக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

(இ) 1968–69-ஆம் நிதி ஆண்டில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?